1986 நவம்பர் 20]

டில் வாங்கும்போது விலைகள் உயர்கிறதே—ரூ. 3.52 என்று குறிப்பிட்டார்கள்—இந்த கூட்டுறவு கடைகளில் கொடுக்கும் விலைக்கும், வெளி மார்க்கெட்டில் கொடுக்கும் விலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைப்பதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா? இந்த கூட்டுறவு கடைகளில் அந்த கார்டுகளுக்கு அதிகமான அரிசியைக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் எல்லாம் தர இயலும். ஆனாலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ரேஷன் கடைகளிலிருந்து அரிசி வெளிக் கடைகளுக்குப்போய் அது பாலிஷ் செய்யப்பட்டு மீண்டும் வியாபாரிகள் அதை விற்கக் கூடிய அளவிற்கு அரிசி ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது என்பது தான் உண்மையான நிலை.

படித்து வேலையில்லாதோருக்கு வழங்கும் உதவிப்பணம்.

97—(*வினா எண் 8177) திரு. க. பாரமலை : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எஸ்.எஸ்.எல்.சி. படித்து வேலையில்லாதோருக்கு வழங்கப்படும் உதவிப்பணம் மதுரை மாவட்டத்தில் கடந்த ஒரு வருடமாக வழங்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உதவிப்பணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இந்தக் கேள்விக்கு இல்லையென்று பதில் சொன்னார்கள். ஏற்கனவே நான் கேள்விப்படுவது பல இடங்களில் இப்படி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வழங்கப்படுகிற உதவிப் பணம் இப்போது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மதுரை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, 1985–86, 1986–87 அதாவது நடப்பாண்டிலும் சேர்த்து, மொத்தம் எத்தனை பேருக்கு இந்த உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் 7,817 பேருக்கு ரூ. 13,30,152 வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, அப்படி வேலை இல்லாதவர்களுக்கான உதவித் தொகை ஒரு மாவட்டத்திலே எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணிக்கையைச் சொன்னார்கள். மாநிலம் முழுவதும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், பட்டதாரிகள் போன்றவர்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை கொடுத்து வருகிறது. இப்படிப்பட்ட உதவித் தொகையைப் பெறுகின்ற அவர்களை, ரேஷன் கார்டுகள் விநியோகம் செய்வது, வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது, சில அலுவலகங்களில் தேங்கியிருக்கின்ற ஸ்டேட்மெண்ட் தயாரிப்பது, போன்ற வேலைகளுக்கு உபயோகப்படுத்திக் கொண்டால், அவர்களும் வேலையில் பயிற்சி பெற்ற மாதிரியும் இருக்கும், அரசாங்கம் கொடுக்கின்ற உதவித் தொகைக்கு வேலை வாங்கிய மாதிரியும் இருக்கும். பின்னர் அவர்கள் அரசுப் பணிகளில் சேர்வதற்கு இது ஒரு வாய்ப்பாகவும், உதவியாகவும் அமையும். எனவே இப்படிப்பட்ட வாக்காளர் ஜாபிதா தயாரிப்பது, ரேஷன் கார்டுகள் விநியோகிப்பது போன்ற வேலைகளுக்கு இவர்களைப் பயன்படுத்துகின்ற முயற்சிகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு புரட்சித் தலைவர் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதிலிருந்து, 1980—81-லிருந்து 31—10—1986 வரை ரூ. 13,64,64,397 வழங்கியிருக்கிறோம். ஆகவே அவர்களைப் பயனுள்ள வேலைகளில் தற்காலிகமாக ஏற்படுகின்ற அரசு வேலைகளுக்குப் பயன்படுத்த இயலுமா என்பதைப் பற்றி மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூறிய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போன்று, உதவிப் பணம் என்று கொடுப்பதைவிட அவர்களை 'பார்ட்-டைம் ஒர்க்கர்ஸ்' என்ற வகையில், அரசாங்கத்தினுடைய பகுதி நேர ஊழியர் என்ற நிலையை உருவாக்கி, போக்குவரத்துப் பணி, சிவில் சப்ளையில் ஏற்படுகின்ற தவறுகள், குற்றங்கள், போலிக் கார்டுகளைச் கண்டு பிடித்தல் போன்ற சமுதாய நலக் குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்துவது பயன் உள்ளதாக இருக்கும். அதே வேலைக்கு, அடுத்து வரும் பொறுப்புகளுக்கு ஒரு சர்டிபிகேட் அல்லது சான்றிதழ் வழங்குகின்ற வகையிலும் இருக்கும். அந்த வகையிலே பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?